# TAMIL NADU ELECTRICITY OMBUDSMAN

19- A, Rukmini Lakshmipathy Salai, (Marshal Road),
Egmore, Chennai – 600 008.
Phone : ++91-044-2841 1376 / 2841 1378/ 2841 1379 Fax : ++91-044-2841 1377
Email : tnerc@nic.in Web site : www.tneo.gov.in


## முன்னிலை : திரு. செ. தேவராஜன், மின்குறை தீர்ப்பாளர்

## மேல்முறையீட்டு மனு எண் 73 /2017

திருமதி. என். வள்ளியம்மாள்,
க/பெ சபாபதி,
நவாஜாத்து,
கோடாங்கிப்பட்டி அஞ்சல்,
வேடசந்தூர் வழி, ஒட்டன்சத்திரம் தாலுக்கா,
திண்டுக்கல் மாவட்டம். ....... மேல்முறையீட்டாளர்
( திரு. N. வள்ளியம்மாள்)

எதிர்

1) செயற் பொறியாளர்,
ஒட்டன்சத்திரம்,
திண்டுக்கல் மின் பகிர்மான வட்டம்,
தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
110 கே.வி. துணை மின் நிலையம்,
தாராபுரம் ரோடு, திண்டுக்கல்–624 619.

2) உதவி செயற் பொறியாளர்/டவுன்,
வேடசந்தூர்,
திண்டுக்கல் மின் பகிர்மான வட்டம்,
தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
110 கே.வி. துணை மின் நிலையம்,
வேடசந்தூர், திண்டுக்கல்–624 710. . . . எதிர்மனுதாரர்கள்
(திரு. S. காளிமுத்து, உதவி செயற்பொறியாளர்/டவுன்/
வேடசந்தூர்)

**கேட்புரை நாள் : 21–03–2018**

**ஆணை நாள் : 25.06.2018**

திருமதி. என். வள்ளியம்மாள், க/பெ சபாபதி, நவாஜாத்து, கோடாங்கிப்பட்டி அஞ்சல், வேடசந்தூர் வழி, ஒட்டன்சத்திரம் தாலுக்கா, திண்டுக்கல் மாவட்டம் அவர்களின் 26.12.2017 நாளிட்ட மனு மேல்முறையீட்டு மனு எண். 73 / 2017 ஆக பதிவு செய்யப்பட்டுள்ளது. மேற்கண்ட மனுவின் மீது மின்குறைதீர்ப்பாளரின் கேட்புரை 21.03.2018 அன்று நடைபெற்றது. மேல்முறையீட்டாளரின் மனுவிலுள்ள வாதங்கள், எதிர்மனுதாரரின் பதிலுரையிலுள்ள வாதங்கள்

மற்றும் இருதரப்பினராலும் கேட்புரை நாளில் எடுத்துரைக்கப்பட்ட வாதங்கள் ஆகிய அனைத்தையும் ஆராய்ந்து மின்குறைதீர்ப்பாளரால் கீழ்கண்ட ஆணை வழங்கப்படுகிறது.

**ஆணை**

**1. மேல்முறையீட்டாளரின் கோரிக்கை :**

மேல்முறையீட்டாளர் கடந்த 24/03/2000 அன்று வரிசை பதிவு எண். EEND241/1999-2000ன் படி அவரது விவசாய பூமிக்கு இலவச மின் இணைப்பு கோரி மனு கொடுத்துள்ளார். அவரது மனுவினை சரிவர ஆய்வு செய்யாமல் திண்டுக்கல் மின் நுகர்வோர் குழுமம் வழங்கிய 26.09.2017 நாளிட்ட உத்தரவினை ரத்து செய்து உடனடியாக மின் இணைப்பு வழங்க ஆவண செய்யுமாறு கேட்டுக் கொண்டுள்ளார்.

**2. வழக்கின் சுருக்கம்:**

2.1 மேல்முறையீட்டாளர் கடந்த 24/03/2000 அன்று வரிசை பதிவு எண். EEND241/1999-2000ன் படி அவரது விவசாய பூமிக்கு இலவச மின் இணைப்பு கோரி மனு கொடுத்துள்ளார். அதன்பின் எந்தவிதமான தகவலும் வரவில்லை. பலமுறை அலுவலகம் சென்று விசாரித்தபோது முறையான பதில் இல்லை.

2.2 செயற்பொறியாளர்/ ஒட்டன்சத்திரம் அவர்களிடம் தகவல் கேட்டதற்கு கடந்த 03.11.2010 அன்று மேல்முறையீட்டாளருக்கு பதிவு தபால் அனுப்பபட்டதாகவும், 90 நாட்கள் தயார் நிலை அறிவிப்பு கடிதம் கொடுத்து தற்பொழுது 5 வருடம் ஆகிவிட்டதால் வாரிய விதிகளின்படி மின் இணைப்பு வழங்க இயலாது எனவும், அவரது உத்தரவு இரத்து ஆகிறது எனவும் கூறியுள்ளார்.

2.3 எனவே மேல்முறையீட்டாளர் குறைகளை நிவர்த்தி செய்ய வேண்டி, மின் நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றத்தில் மனு கொடுத்துள்ளார். மின் நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றம் மேல்முறையீட்டாளரின் மனு தள்ளுபடி செய்யப்படுகிறது என கூறி 26.09.2017 தேதியிட்ட உத்தரவு நகல் ஒன்றினை மேல்முறையீட்டாளருக்கு பதிவு தபால் மூலம் கடந்த 16.12.2017 அன்று வழங்கப்பட்டதாக தெரிவித்துள்ளார். மன்றத்தின் தீர்வில் அதிருப்தியுற்ற மேல்முறையீட்டாளர் மின்குறை தீர்ப்பாளரிடம் மேல்முறையீடு செய்துள்ளார்.

**3. <u>மன்றத்தின் தீர்வு</u>**

**3.1** திண்டுக்கல் மின்பகிர்மான வட்டத்தின் மின்நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றம் தன்னுடைய தீர்வை **26.9.2017** நாளிட்ட ஆணையில் தெரிவித்துள்ளது. மின்நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றத்தின் ஆணை கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

*"<u>ஆணை</u>*

*திருமதி. என். வள்ளியம்மாள், க/பெ சபாபதி, நாவலூற்று, கோடாங்கிப்பட்டி அஞ்சல், வேடசந்தூர் வழி, ஒட்டன்சத்திரம், தாலுகா அவர்களுக்கு அறிவிப்பது என்னவென்றால், தாங்கள் விவசாய மின் இணைப்பு வேண்டி பதிவு செய்த விண்ணப்ப பதிவு எண்.**241/1999–2000** –ற்கான **90** நாட்கள் தயார் நிலை பதிவு செய்வதற்கான முன் அறிவிப்பு கடிதம் வழங்கப்பட்டு உச்ச கால அவகாசமான **5** வருட காலமானது **31.01.2016** அன்றுடன் முடிவடைந்துவிட்ட படியாலும் தாங்கள் அக்கால கெடுவிற்குள் வாரிய விதிகளின்படி கால அவகாசம் கேட்டு விண்ணப்பிக்காத காரணத்தால் தங்களது மனுமீது மேல் நடவடிக்கை எடுக்க இயலாது என இம்மன்றத்தால் தீர்வு காணப்பட்டு ஆணை பிறப்பிக்கப்பட்டு உத்தரவிடப்படுகிறது."*

**4. <u>மேல்முறையீட்டாளரின் மனுவிலுள்ள வாதங்கள்:</u>**

**4.1** நான் கடந்த **24/03/2000** அன்று வரிசை பதிவு எண். EEND241/1999-2000ன் படி எனது விவசாய பூமிக்கு இலவச மின் இணைப்பு கோரி மனு கொடுத்தேன். எனக்கு எந்தவிதமான தகவலும் வரவில்லை. நான் பலமுறை அலுவலகம் சென்று விசாரித்தபோது முறையான பதில் இல்லை. இதற்கிடையில் எனது கணவருக்கு ஏற்பட்ட விபத்தின் காரணமாக மேல் சிகிச்சைக்கு நான் கோயம்புத்தூரில் எனது மகளின் வீட்டில் தங்கி இருந்தேன். இந்த கால கட்டத்தில் எனது வீட்டில் எனது உறவினர் ஒருவர் தங்கி இருந்தார்.

**4.2** தற்பொழுது செயற்பொறியாளர் ஒட்டன்சத்திரம் அவர்களிடம் தகவல் கேட்டதற்கு கடந்த **03.11.2010** அன்று எனக்கு பதிவு தபால் அனுப்பட்டதாகவும், **90** நாட்கள் தயார் நிலை அறிவிப்பு கடிதம் கொடுத்து தற்பொழுது **5** வருடம் ஆகிவிட்டதால் வாரிய விதிகளின்படி மின் இணைப்பு வழங்க இயலாது எனவும், எனது உத்தரவு இரத்து ஆகிறது எனவும் கூறினார்.

4.3 நான் அதற்கு எனக்கு எந்த பதிவு தபாலும் வரவில்லை எனவும், அப்படி வந்திருந்தால் அதற்கான அத்தாட்சியை காண்பிக்குமாறு கூறினேன். அதற்கு அவர் அத்தாட்சி எதுவும் தன்னிடம் இல்லை எனக் கூறினார்.

4.4 நான் மேலும் எனது குறைகளை நிவர்த்தி செய்ய வேண்டி, மின் நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றத்தில் மனு கொடுத்தேன். அதன்படி திண்டுக்கல் மின் பகிர்மான வட்டத்தில் நடைபெறும் மின் நுகர்வோர் குழும கூட்டத்தில் கலந்து கொள்ளுமாறு கடித எண்.மே.பொ/தி.மி.ப.வ/திகல்/செ.பொ/உ.செ.பொ/ம.தொ.அ/கே.மிருகும/அ.எண்.1054/17 நாள் 03.01.2017 வாயிலாக பதிவு தபால் வந்தது. அதை நான் பெற்றுக் கொண்டு, எனக்கு உடல் நலம் சரியில்லாததால் என் சார்பாக எனது கணவர் திரு. R.சபாபதி அவர்கள் 12.01.2017–ல் நடந்த குறைதீர்வு கூட்டத்தில் கலந்து கொண்டு எனது கோரிக்கையை வலியுறுத்தி மனு செய்தார்.

4.5 மேலும் 18.09.2017 தேதியிட்ட கடிதம் ஒன்றில் 26.09.2017 திண்டுக்கல் மின் பகிர்மான வட்டத்தில் நடைபெறும் மின் நுகர்வோர் குழும கூட்டத்தில் கலந்து கொள்ளுமாறு பதிவு தபால் எனக்கு வந்தது. எனக்கு உடல்நிலை சரியில்லாததால், என் சார்பாக எனது கணவர் திரு. R.சபாபதி அவர்கள் 26.09.2017 அன்று கூட்டத்தில் கலந்து கொண்டு எனது குறைகளை கூறினார்.

4.6 மேற்படி மின் நுகர்வோர் குறைதீர்க்கும் மன்ற தலைவர் மற்றும் உறுப்பினர் அவர்கள் எனது தரப்பு நியாயங்களை சரிவர கேட்காமல், எனக்கு மின் இணைப்பு வழங்க இயலாது எனவும், எனது மனுதள்ளுபடி செய்யப்படுகிறது எனவும் கூறி 26.09.2017 தேதியிட்ட உத்தரவு நகல் ஒன்றினை எனக்கு பதிவு தபால் மூலம் கடந்த 16.12.2017 அன்று அனுப்பினார். நான் அதை கடந்த 18.12.2017 அன்று பெற்றுக் கொண்டு மேற்படி சங்கதிகளை தெரிந்து கொண்டேன்.

4.7 மேற்படி உத்தரவில் 30 நாட்களுக்குள் மேல்முறையீடு செய்ய வேண்டும் என கூறப்பட்டுள்ளது. எனக்கு உத்தரவு நகல் சுமார் இரண்டரை மாதம் காலதாமதமாக வந்துள்ளது.

4.8 எனது மனுவினை பரிசீலனை செய்து எனது விவசாய பூமிக்கு மின் இணைப்பு வேண்டி நான் கொடுத்த மனுவினை சரிவர ஆய்வு செய்யாமல் திண்டுக்கல் மின் நுகர்வோர் குழுமம் 26.09.2017–யிட்ட உத்தரவினை ரத்து செய்து எனக்கு உடனடியாக மின் இணைப்பு வழங்க ஆவண செய்யுமாறு தாழ்மையுடன் கேட்டுக் கொள்கிறேன்.

5. <u>எதிர்மனுதாரரின் பதிலுரையிலுள்ள வாதங்கள் :</u>

5.1 மனுதாரர், திருமதி. என்.வள்ளியம்மாள், தனது விவசாய நிலத்திற்கு மின் இணைப்பு வேண்டி பெறப்பட்ட விண்ணப்பம் கடந்த 24.03.2000 அன்று EEND/241/99-2000ன் படி செயற்பொறியாளர், வடக்கு, திண்டுக்கல் அலுவலகத்தில் பதிவு செய்யப்பட்டிருந்தது. அது, ஒட்டன்சத்திரம் கோட்டத்திற்கு உட்பட்டு இருந்ததால் ஒட்டன்சத்திரம் கோட்டத்திற்கு 2003ம் ஆண்டு மாற்றப்பட்டது.

5.2 2010ம் வருடம் தமிழக அரசு இரண்டு லட்சம் மின் இணைப்பு வழங்கும் திட்டம் அறிவிக்கப்பட்டது, மேற்கண்ட திட்டம் பற்றி தகவல்கள் அறிவிக்கைகள், நாளிதழ்கள் மூலமாகவும், ஊடகங்கள் வாயிலாகவும், வெளியிடப்பட்டது. தமிழ்நாடு மின்சார வாரியம் மேற்கண்ட திட்டம் பற்றி அறிவிப்பு பலகை மூலமாக கிராமங்களில் பொதுமக்களுக்கு தெரிவிக்கப்பட்டது.

5.3 ஒட்டசத்திரம் கோட்டத்தில் 1990ம் ஆண்டு முதல் 2000ம் ஆண்டு வரை பதியப்பட்ட 1450 விண்ணப்பங்களுக்கு தயார் நிலை பதிவு செய்ய 30 நாட்கள் அறிவிப்பு பதிவுத் தபால்கள் மூலம் அனுப்பப்பட்டது. மேற்கண்ட திட்டத்தின் கீழ் மனுதாரர் திருமதி.என்.வள்ளியம்மாள், அவர்களுக்கு பதிவு தபால் மூலம் 03.11.2010 அன்று 30 நாட்கள் நோட்டீஸ் அனுப்பப்பட்டது. மேலும் பொதுமக்கள் அறியும் பொருட்டு தினசரி நாளிதழ்களிலும் பிரசுரிக்கப்பட்டது.

5.4 மேற்கண்ட, திட்டத்தின் கீழ் ஒட்டன்சத்திரம் கோட்டத்தில் தயார் நிலை பதிவு செய்த 696 நபர்களுக்கு மின்இணைப்பு வழங்கப்பட்டது. மேலும், குறிப்பிட்ட 30 நாட்களுக்குள் தயார் நிலை பதிவு செய்யாத பயனாளிகளுக்கு மீண்டும் கால நீட்டிப்பு வழங்கப்பட்டு தயார் நிலை பதிவு செய்யப்பட்டது.

5.5 தமிழ்நாடு மின்சார வாரிய விதிகளின்படி சாதாரண வரிசையில் மின் இணைப்பு பெறுவதற்கு, அறிவிப்பு வழங்கப்பட்டு ஐந்தாண்டுகள் வரை தயார் நிலை பதிவு செய்வதற்கு காலநீட்டிப்பு செய்ய வழிவகை செய்யப்பட்டுள்ளது.

5.6 குறிப்பிட்ட காலம் 30 நாட்கள் மற்றும் நீட்டிப்பு காலங்களில் தயார் நிலை பதிவு செய்யாத 90 நபர்களுக்கு, ஐந்தாண்டு உச்ச வரம்பு பயன்படுத்தி தயார் நிலை பதிவு செய்யப்பட்டது. மனுதாரர் திருமதி.என்.வள்ளியம்மாள் அவர்களுக்கு 30 நாட்கள் அறிவிப்பு நோட்டீஸ் 03.11.2010 அன்று அவர்கள் விண்ணபத்தில் குறிப்பிட்டுள்ள விலாசத்திற்கு பதிவுத் தபால் அனுப்பப்பட்டிருந்தது.

மேலும், விண்ணப்பதாரர் மின்இணைப்பு விண்ணப்பம் பதியப்பட்ட நாளிலிருந்து தனது விலாசம் மாற்றம் இருப்பதாக இவ்வலுவலகத்தில் தெரிவிக்கப்பட்டதற்கான, பதிவுகள் ஏதும் இல்லை.

5.6 மேற்கண்ட, அறிவிப்பு மனுதாரர் பெறப்படவில்லை என குறிப்பிட்டுள்ளார். அறிவிப்பு திரும்ப பெறப்படவில்லை. எனவே, மனுதாரர் அறிவிப்பு பெற்றதாகக் கருதப்பட்டது. தற்பொழுது, அஞ்சலக அலுவலகத்தில் விசாரணை செய்ததில், மூன்றாண்டுகளுக்கு முன்பு உள்ள பதிவுத் தபால் தகவல்கள் ஏதும் இல்லை என கூறிவிட்டார்கள்.

5.7 மனுதாரர், தமிழ்நாடு மின்சார வாரியம் தயார் நிலை பதிவு செய்ய அனுமதிக்கப்பட்ட உச்ச கால வரம்பான ஐந்தாண்டுகள் கழித்து தற்பொழுது, அதாவது 28.03.2016 அன்று மின்இணைப்பு வேண்டி மனு அளித்துள்ளார். தமிழ்நாடு மின்சார வாரிய விதிமுறைகளின் படி ஐந்தாண்டுகளுக்கு மேல் தயார் நிலை பதிவு செய்ய அனுமதிக்க முடியாததால் தயார் நிலை பதிவு செய்ய அனுமதிக்க இயலவில்லை.

5.8 மேலும், மனுதாரர், 28.11.2016 அன்று திண்டுக்கல் மின் நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றத்தில் மனுதாக்கல் செய்யப்பட்டு மேற்கண்ட மன்றத்தில் ஐந்தாண்டுக்கு மேல் ஆகிவிட்டதால் தமிழ்நாடு மின்சார வாரிய விதிமுறைகளின்படி மின்இணைப்பு வழங்க நடவடிக்கை எடுக்க இயலாது என்று ஆணை வழங்கப்பட்டது.

5.9 தற்பொழுது உள்ள வாரிய விதிமுறைகளின் படி சாதாரண வரிசையில் மின் இணைப்பு பெறுவதற்கு அறிவிப்பு அனுப்பட்ட நாளிலிருந்து ஐந்தாண்டுகள் வரை கால் நீட்டிப்பு பெற்று தயார் நிலை பதிவு செய்து மின் இணைப்பு பெறுவதற்கு வழிவகை செய்யப்பட்டுள்ளது.

5.10 மனுதாரர் ஐந்தாண்டுகள் கழித்து மனு செய்துள்ளபடியால், தற்பொழுதுள்ள வாரிய விதிமுறைகளின்படி மனுதாரரின் மனு மீது உரிய நடவடிக்கை எடுக்க முடியாத நிலை உள்ளது மேற்கண்ட அறிக்கை தங்களின் உரிய நடவடிக்கைக்காக பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது.

## 6. <u>மின்குறைதீர்ப்பாளரின் கேட்புரை:</u>

6.1 மேல்முறையீட்டாளரும் எதிர்மனுதாரரும் தங்களது தரப்பு வாதங்களை நேரில் எடுத்துரைப்பதற்கு வசதியாக 21.03.2018 அன்று மின்குறைதீர்ப்பாளரின் முன்பு கேட்புரை நடத்தப்பட்டது.

6.2 மேல்முறையீட்டாளர் திருமதி. N. வள்ளியம்மாள், அவர்கள் கலந்து கொண்டு தன்னுடைய தரப்பு வாதங்களை நேரில் எடுத்துரைத்தார்.

6.3 எதிர்மனுதாரர்கள் சார்பில் திரு. S. காளிமுத்து, உதவி செயற்பொறியாளர்/டவுன்/வேடசந்தூர், கலந்து கொண்டு தன்னுடைய தரப்பு வாதங்களை நேரில் எடுத்துரைத்தார்.

## 7. <u>மேல்முறையீட்டாளர் கேட்புரை நாளில் எடுத்துரைத்த வாதங்கள்</u>

7.1 மேல்முறையீட்டாளர் திருமதி. N. வள்ளியம்மாள் அவர்கள் மேல்முறையீட்டு மனுவிலுள்ள வாதங்களையே மீண்டும் வலியுறுத்தினார்.

7.2 மேல்முறையீட்டாளர் கடந்த 24/03/2000 அன்று அவரது விவசாய பூமிக்கு இலவச மின் இணைப்பு கோரி மனு கொடுத்தபின்பு எந்தவிதமான தகவலும் வரவில்லையென்றம் பலமுறை உதவிப்பொறியாளர் அலுவலகம் சென்று விசாரித்தபோது முறையான பதில் இல்லையென்றும் தெரிவித்தார். இதற்கிடையில் அவரது கணவருக்கு ஏற்பட்ட விபத்தின் காரணமாக மேல் சிகிச்சைக்கு கோயம்புத்தூரில் அவரின் மகளின் வீட்டில் தங்கி இருந்ததாகவும், அவரது வீட்டில் உறவினர் ஒருவர் தங்கி இருந்ததாகவும் தெரிவித்தார்.

7.3 இதுசம்பந்தமாக செயற்பொறியாளர் ஒட்டன்சத்திரம் அவர்களிடம் தகவல் கேட்டதற்கு கடந்த 03.11.2010 அன்று பதிவு தபால் அனுப்பட்டதாகவும், 90 நாட்கள் தயார் நிலை அறிவிப்பு கடிதம் கொடுத்து தற்பொழுது 5 வருடம் ஆகிவிட்டதால் வாரிய விதிகளின்படி மின் இணைப்பு வழங்க இயலாது எனவும், உத்தரவு இரத்து ஆகிவிட்டதாகவும் தெரிவிக்கப்பட்டதாக கூறினார். அதற்கு அவ்வாறு மேல்முறையீட்டாளருக்கு பதிவு தபால் எதுவும் வரவில்லையென்றும் அப்படி அனுப்பியிருந்தால் அதற்கான அத்தாட்சியை அளிக்குமாறு வேண்டியதற்கு அவ்வாறு அத்தாட்சி எதுவும் இல்லையென்று எதிர்மனுதாரர் தெரிவித்தாகவும் வாதிட்டார்.

7.4 மேலும் இதுகுறித்து மின் நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றத்திடம் முறையீடு செய்யப்பட்டதாகவும், குறைதீர் மன்ற தலைவர் மற்றும் உறுப்பினர் அவர்கள் மேல்முறையீட்டாளர் தரப்பு நியாயங்களை சரிவர கேட்காமல், மின் இணைப்பு வழங்க இயலாது என தெரிவித்து தனது மனுவை மனுதள்ளுபடி செய்துவிட்டதாகவும் தெரிவித்தது நியாமில்லையெனவும் வாதிட்டார்.

7.5 ஆகவே, தனது மனுவினை பரிசீலனை செய்து அவரது விவசாய பூமிக்கு உடனடியாக மின் இணைப்பு வழங்க ஆணை வழங்குமாறு கேட்டுக்கொண்டார்.

## 8. <u>எதிர்மனுதாரர் கேட்புரை நாளில் எடுத்துரைத்த வாதங்கள்</u>

8.1 எதிர்மனுதாரர்கள் சார்பில் திரு. S. காளிமுத்து, உதவி செயற்பொறியாளர்/டவுன்/ வேடசந்தூர் அவர்கள் கலந்து கொண்டு தங்களுடைய பதிலுரையிலுள்ள வாதங்களையே மீண்டும் வலியுறுத்தினார்.

8.2 2010ம் வருடம் தமிழக அரசால் இரண்டு லட்சம் மின் இணைப்பு வழங்கும் திட்டம் அறிவிக்கப்பட்டதாகவும், மேற்கண்ட திட்டம் பற்றிய தகவல்கள், அறிவிக்கைகள், நாளிதழ்கள் மூலமாகவும், ஊடகங்கள் வாயிலாகவும் வெளியிடப்பட்டதாக தெரிவித்து நாளிதழ்களில் வெளியான தகவலை ஊர்ஜிதம் செய்யும் வகையில் நாளிதழின் நகல் ஒன்றையும் சமர்ப்பித்தார். மேலும், இது சம்பந்தமாக தமிழ்நாடு மின்சார வாரியம் மேற்கண்ட திட்டம் பற்றி அறிவிப்பு பலகை மூலமாக கிராமங்களில் பொதுமக்களுக்கு தெரிவிக்கப்பட்டதாகவும் வாதிட்டார்.

8.3 ஒட்டன்சத்திரம் கோட்டத்தில் 1990ம் ஆண்டு முதல் 2000ம் ஆண்டு வரை பதியப்பட்ட 1450 விண்ணப்பங்களுக்கு தயார் நிலை பதிவு செய்ய 30 நாட்கள் அறிவிப்பு பதிவுத் தபால்கள் மூலம் அனுப்பப்பட்டதாகவும், அவ்வாறே மேற்கண்ட திட்டத்தின் கீழ் மேல்முறையீட்டாளர் திருமதி. என். வள்ளியம்மாள் அவர்களுக்கு பதிவுத் தபால் மூலம் 03.11.2010 அன்று 30 நாட்கள் நோட்டீஸ் அனுப்பப்பட்டதாகவும் தெரிவித்தார்.

8.4 தமிழ்நாடு மின்சார வாரிய விதிகளின்படி சாதாரண வரிசையில் மின் இணைப்பு பெறுவதற்கு, அறிவிப்பு வழங்கப்பட்டு ஐந்தாண்டுகள் வரை தயார் நிலை பதிவு செய்வதற்கு காலநீட்டிப்பு செய்ய வழிவகை செய்யப்பட்டுள்ளதாகவும், மனுதாரர் திருமதி.என்.வள்ளியம்மாள் அவர்களுக்கு 30 நாட்கள் அறிவிப்பு நோட்டீஸ் 03.11.2010 அன்று அவர்கள் விண்ணப்பத்தில் குறிப்பிட்டுள்ள விலாசத்திற்கு பதிவுத் தபால் அனுப்பப்பட்டிருந்ததாகவும் தெரிவித்தார். மேலும், அறிவிப்பு திரும்ப பெறப்படவில்லை என்பதால் மேல்முறையீட்டாளர் அறிவிப்பு கடிதம் பெற்றதாகத்தான் கருதவேண்டும் எனவும், இது சம்பந்தமாக அஞ்சலக அலுவலகத்தில் விசாரணை செய்ததில், மூன்றாண்டுகளுக்கு முன்பு உள்ள பதிவுத் தபால் குறித்த தகவல்கள் ஏதும் இல்லை என கூறிவிட்டதாகவும் தெரிவித்தார்.

8.5 மேல்முறையீட்டாளர், தமிழ்நாடு மின்சார வாரியம் தயார் நிலை பதிவு செய்ய அனுமதிக்கப்பட்ட உச்ச கால வரம்பான ஐந்தாண்டுகள் கழித்து தற்பொழுது, அதாவது 28.03.2016 அன்று மின்இணைப்பு வேண்டி மனு அளித்துள்ளதால் தமிழ்நாடு மின்சார வாரிய விதிமுறைகளின் படி ஐந்தாண்டுகளுக்கு மேல் தயார் நிலை பதிவு செய்ய அனுமதிக்க முடியாததால் தயார் நிலை பதிவு செய்ய அனுமதிக்க இயலவில்லை என தெரிவித்தார்.

**9. <u>மின்குறைதீர்ப்பாளரின் தீர்வு</u>**

9.1 இருதரப்பு வாதங்களையும் ஆராய்ந்து பார்க்கும்பொழுது கீழ்கண்டவைகள் வழக்கெழு வினாக்களாக தெரிகின்றன.

(i) விவசாய விண்ணப்பங்களுக்கு தயார் நிலையை பதிவு செய்வதற்கு உரிமதாரரின் நிலையாணை மற்றும் குறிப்பாணைகளின்படி தரப்பட்டுள்ள கால அவகாசம் எவ்வளவு ?

(ii) மேல்முறையீட்டாளரின் இலவச மின் இணைப்புக்கான கோரிக்கை உரிமதாரரின் நிலையாணை மற்றும் குறிப்பாணைகளின்படி ஏற்புடையதுதானா ?

**10. <u>வழக்கெழு வினா ஒன்றிற்கான தீர்வு</u> :–**

10.1 விவசாய மின் இணைப்புகளை பொருத்தவரையில், தயார் நிலையை பதிவு செய்வது சம்பந்தமாக தமிழ்நாடு மின்சார வழங்கல் விதி (Supply Code) மற்றும் பகிர்மான விதி (Distribution Code) தொகுப்பில் எதுவும் கூறப்படவில்லை. எனவே, உரிமம்தாரர் கூறிய விதிகளைத்தான் பின்பற்ற வேண்டும்.

10.2 எதிர்மனுதாரர் விவசாய மின் இணைப்பு கேட்கும் விண்ணப்பதாரர்கள் தங்களின் மனுவின் பேரில் தயார் நிலையை பதிவு செய்ய கொடுக்கப்பட்டுள்ள 90 நாட்கள் முடிந்த 5 வருடங்கள் வரை, தயார்நிலையை பதிவு செய்யலாம் என்று தெரிவித்துள்ளார். இது சம்பந்தமாக தலைமை பொறியாளர்/திட்டமிடல் அவர்களின் 22.9.2009 நாளிட்ட கடிதத்தை ஆராய விரும்புகிறேன்.

*“1. In cases of delay in reporting readiness of agricultural applications even beyond the extended period of one year, extension of time may be given to the original applicant/ legal heirs, as the case may be for entering readiness upto 5 years from the date of expiry of 90 days notice period once the party has attained the normal seniority. However, this should not be applicable to purchaser of the land who purchases the land after expiry of 90 days notice.*

*2. The applications which were kept pending (<u>except court case/ dispute case</u>) after completing 5 years from the date of expiry of 90 days notice period may be cancelled and intimated to the applicant.*

*3. Cancelled applications need not be revoked.*

*4. Applicants whose applications released / readiness entered, but supply was not availed due to court case / dispute supply may be effected without any time limit, if the case is ended in favour of the applicant on priority. The receipt of this letter may be acknowledged."*

**10.3** மேற்கண்ட ஆணையினை கூர்ந்து படிக்கும் பொழுது நாம் அறிவது ஒரு விவசாய மின் இணைப்பு வேண்டும் விண்ணப்பதாரர் தன்னுடைய தயார் நிலையை, ஏற்கனவே வழங்கப்பட்ட ஒருவருட கால அவகாச நீட்டிப்பிற்கு பின்பும் விண்ணப்பதாரர் / விண்ணப்பதாரரின் வாரிசுக்கு தங்களது தயார் நிலையை பதிவு செய்ய **90** நாட்கள் அறிவிப்பு கடிதத்தின் காலக்கெடு முடிந்த **5** வருடங்கள் வரை காலநீட்டிப்பு வழங்கலாம் என்று தெரிகிறது. மேலும் இது சாதாரண வரிசையிலுள்ள (Normal) பதிவு மூப்பின்படி வழங்கப்படும் அறிவிப்புகளுக்குத்தான் பொருந்தும். மேலும் மேற்கண்ட விதி, தயார் நிலையை பதிவு செய்யக்கோரி விடுத்த அறிவிப்பின் **90** நாட்கள் கடந்த பின்பு மேற்கண்ட நிலத்தை வாங்கியவர்களுக்கு பொருந்தாது என்றும் தெரிகிறது. மேலும் **90** நாட்கள் அறிவிப்பு கடிதம் கொடுக்கப்பட்டு **5** வருடங்கள் கழிந்த விவசாய விண்ணப்பங்கள் ரத்து செய்யப்பட வேண்டும் என்றும் அவ்வாறு ரத்து செய்த விவரம் விண்ணப்பதாரருக்கு தெரிவிக்கப்பட வேண்டும் என்றும் தெரிகிறது. ரத்து செய்யப்பட்ட விண்ணப்பங்கள் திரும்ப எடுத்துக்கொள்ள முடியாது என்றும் தெரிகிறது.

**10.4** மேற்கண்ட தலைமை பொறியாளர்/திட்டமிடல் அவர்களின் **22.9.2009** நாளிட்ட ஆணையின்படி விவசாய விண்ணப்பங்கள் சாதாரண வரிசையின் மூப்பு அடிப்படையில் தயார்நிலையில் பதிவு செய்ய கோரி கொடுக்கப்பட்ட அறிவிப்பிலுள்ள காலக்கெடுவினை **90** நாட்கள் முடிந்த நாளிலிருந்து ஐந்து வருடங்கள் வரை விண்ணப்பதாரர் அல்லது அவர்களின் வாரிசுகள் தங்கள் தயார் நிலையை பதிவு செய்து கொள்வதற்கு கால அவகாசம் வழங்க வாரிய விதிகளில் இடமுண்டு என்று தெரிகிறது.

**11.** **<u>வழக்கெழு வினா இரண்டிற்கான தீர்வு</u> :—**

11.1 இவ்வழக்கில் மேல்முறையீட்டாளர் எதிர்மனுதாரர்கள் 03.11.2010 அன்று பதிவு தபால் மூலம் அனுப்பப்பட்ட தயார் நிலை கடிதம் எதுவும் வரவில்லையென்றும் அப்படி அனுப்பியிருந்தால் அதற்கான அத்தாட்சியை அளிக்குமாறு வேண்டியதற்கு எதிர்மனுதாரர்களால் அவ்வாறு அத்தாட்சி எதையும் காண்பிக்கப்படவில்லை என்றும் வாதிட்டுள்ளார்.

11.2 எதிர்மனுதாரர்களின் வாதத்தில் 2010ம் வருடம் தமிழக அரசால் இரண்டு லட்சம் மின் இணைப்பு வழங்கும் திட்டம் அறிவிக்கப்பட்டதாகவும், மேற்கண்ட திட்டம் பற்றிய தகவல்கள் அறிவிக்கைகள், நாளிதழ்கள் மூலமாகவும், ஊடகங்கள் வாயிலாகவும் வெளியிடப்பட்டதாகவும், இது சம்பந்தமாக தமிழ்நாடு மின்சார வாரியம் மேற்கண்ட திட்டம் பற்றி அறிவிப்பு பலகை மூலமாக கிராமங்களில் பொதுமக்களுக்கு தெரிவிக்கப்பட்டதாகவும் வாதிட்டுள்ளார்.

11.3 மேலும், ஒட்டன்சத்திரம் கோட்டத்தில் 1990ம் ஆண்டு முதல் 2000ம் ஆண்டு வரை பதியப்பட்ட 1450 விண்ணப்பங்களுக்கு தயார் நிலை பதிவு செய்ய 30 நாட்கள் அறிவிப்பு பதிவுத் தபால்கள் மூலம் அனைவருக்கம் அனுப்பப்பட்டதாகவும், அவ்வாறே மேற்கண்ட திட்டத்தின் கீழ் மேல்முறையீட்டாளர் திருமதி.என்.வள்ளியம்மாள், அவர்களுக்கு பதிவு தபால் மூலம் 03.11.2010 அன்று 30 நாட்கள் நோட்டீஸ் அனுப்பப்பட்டதாகவும் தெரிவித்துள்ளார்.

11.4 இதுசம்பந்தமாக எதிர்மனுதாரர்கள் நாளிதழ்களில் வெளியான தகவலை ஊர்ஜிதம் செய்யும் வகையில் நாளிதழின் நகல் ஒன்றையும், மேல்முறையீட்டாளருக்கு 03.11.2010 அன்று அனுப்பிய கடிதத்தின் நகலையும் சமர்பித்துள்ளார்கள்.

11.5 இவ்வழக்கில் கவனத்தில் கொள்ளவேண்டியது எதிர்மனுதாரர்கள் அனுப்பியதாக கூறப்படும் 03.10.2010 நாளிட்ட தயார்நிலை கடிதமானது மேல்முறையீட்டாளருக்கு மட்டும் பதிவுத்தபாலில் அனுப்பப்படவில்லை, அரசு அறிவிப்பின்படி ஒட்டன்சத்திரம் கோட்டத்திற்கு உட்பட்ட 1450 பயனாளிகளுக்கும் சேர்த்து மொத்தமாக அனுப்பப்பட்டுள்ளது. இதுசம்பந்தமாக நாளிதழ்களிலும் விளக்கமாக அறிவிக்கை செய்யப்பட்டுள்ளது. மேலும் விவசாய மின்னிணைப்புகள் வழங்குவதற்கான ஒதுக்கீடுகள் உரிமதாரரின் அதிகார வரம்பிற்குள் வராது, விவசாய மின்னிணைப்பிற்கான ஒதுக்கீடு குறிப்பிட்ட காலஅளவில் தமிழக அரசால் நிர்ணயம் செய்யப்பட்டு அவ்வப்போது அறிவிக்கை செய்யப்படுவதாகும். அதன்பிறகே உரிமதாரர் அந்தக் குறிப்பிட்ட காலவரையில் பதிவுசெய்யப்பட்ட பயனாளிகளை கண்டறிந்து தயார் நிலை பதிவு செய்ய அறிவிக்கை செய்வார்கள். எனவே மேல்முறையீட்டாளர் தனக்கு எதிர்மனுதாரர்கள் அனுப்பிய

பதிவு தபால் வராத காரணத்தில்தான் உரிய கால அவகாசத்தில் தயார்நிலை பதிவு செய்ய இயலவில்லை என்று கூறுவது ஏற்புடையதல்ல.

**11.6** மேல்முறையீட்டாளர் தயார் நிலை பதிவு செய்ய அனுமதிக்கப்பட்ட உச்ச கால வரம்பான ஐந்தாண்டுகள் கழித்து **28.03.2016** அன்றுதான் மின்இணைப்பு வேண்டி மனு அளித்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளதால் பத்தி **10**–ல் உள்ள தீர்வுகளின் அடிப்படையில் தயார்நிலையில் பதிவு செய்ய கோரி கொடுக்கப்பட்ட அறிவிப்பிலுள்ள காலக்கெடுவான **90** நாட்கள் முடிந்த ஐந்தாண்டுகளுக்கு மேல் தயார் நிலை பதிவு செய்ய அனுமதிக்க முடியாததால் தயார் நிலை பதிவு செய்ய அனுமதிக்க இயலவில்லை என்ற எதிர்மனுதாரர்களின் வாதம் எனக்கு ஏற்புடையதாகவே உள்ளது.

**11.7** மேல்முறையீட்டாளர் **24.03.2000** அன்று விண்ணப்பம் பதிவு செய்தபின்பு எந்தவிதமான தகவலும் வரவில்லையென்றம் பலமுறை உதவிப்பொறியாளர் அலுவலகம் சென்று விசாரித்தபோது முறையான பதில் இல்லையென்றும் தெரிவித்துள்ளார். ஆனால் அவரது மனுவிற்கு அனுமதி அளிக்கப்பட்டுவிட்டது என்பதையோ, **5** வருடங்களுக்கும் மேலாக பதில் எதுவும் வரவில்லை என்பதையோ அல்லது மின்இணைப்பு வழங்கப்படாமல் உள்ளது என்பதையோ உயர் அதிகாரிகளிடமோ, குறைதீர் மன்றத்திடமோ உரிய காலவரைக்குள் முறையீடு செய்யாமல் விண்ணப்பம் தள்ளுபடி செய்யப்பட்டுவிட்டது என்ற தகவல் கிடைத்த பின்பு முறையீடு செய்வது காலங்கடந்தது என்று நான் கருதுகிறேன். எனவே, மேல்முறையீட்டாளர் தன்னுடைய ஆவணங்களை உரிமதாரரின் Lr.No.SE/ RE&I(D)/ EE/RE/A1/F.Doc./D1529/2009,(Tech.Branch)/dt.**22.9.2009**–ல் குறிப்பிடப்பட்டுள்ள காலக் கெடுவுக்குள் சமர்ப்பிக்கவில்லை என்று தீர்வு செய்யப்படுகிறது.

**12. <u>முடிவுரை</u> :**

**12.1** வழக்கெழு வினா இரண்டிற்கான தீர்வின்படி, மேல்முறையீட்டாளர் தன்னுடைய விவசாய மின்னிணைப்பு கோரும் விண்ணப்பத்திற்கு தயார் நிலையை பதிவு செய்ய அறிவிப்பு கடிதம் வழங்கப்பட்ட தேதியிலிருந்து **5** வருடங்கள் **90** நாட்களுக்குள் தயார் நிலையை பதிவு செய்ய நடவடிக்கை எடுக்கவில்லை என்பதால், திண்டுக்கல் மின்பகிர்மான வட்டத்தின் மின்நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றத்தின் தீர்வில் மாற்றம் எதுவும் செய்ய முடியாது என்று தீர்வு செய்யப்படுகிறது.

**12.2** மேற்கண்ட முடிவுடன் மேல்முறையீட்டு மனு எண்.**73/2017** முடிவுக்கு கொண்டு வரப்படுகிறது. செலவுத் தொகை இல்லை.

**(செ.தேவராஜன்)**
மின்குறைதீர்ப்பாளர்

பெறுநர்
1) திருமதி. என். வள்ளியம்மாள்,
க/பெ சபாபதி,
நவாஜாத்து,
கோடாங்கிப்பட்டி அஞ்சல்,
வேடசந்தூர் வழி, ஒட்டன்சத்திரம் தாலுக்கா,
திண்டுக்கல் மாவட்டம்.

2) செயற் பொறியாளர்,
ஒட்டன்சத்திரம்,
திண்டுக்கல் மின் பகிர்மான வட்டம்,
தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
110 கே.வி. துணை மின் நிலையம்,
தாராபுரம் ரோடு, திண்டுக்கல்–624 619.

3) உதவி செயற் பொறியாளர்/டவுன்,
வேடசந்தூர்,
திண்டுக்கல் மின் பகிர்மான வட்டம்,
தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
110 கே.வி. துணை மின் நிலையம்,
வேடசந்தூர், திண்டுக்கல்–624 710.

4) தலைவர்,
(மேற்பார்வை பொறியாளர்),
மின் நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றம்,
திண்டுக்கல் மின் பகிர்மான வட்டம்,
தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
மீனாட்சி நாயக்கன்பட்டி அஞ்சல், திண்டுக்கல்–624 002.

5) இயக்குநர் / பகிர்மானம்,
தமிழ்நாடு மின்உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகம்,
நடிப்பிசைப் புலவர் கே.ஆர். ராமசாமி மாளிகை,
144, அண்ணாசாலை, சென்னை – 600 002.

6) தலைவர் & நிர்வாக இயக்குநர்,
தமிழ்நாடு மின்உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகம்,
நடிப்பிசைப் புலவர் கே.ஆர். ராமசாமி மாளிகை,
144, அண்ணாசாலை, சென்னை – 600 002.

7) செயலாளர்,
தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம்
எண். 19A, ருக்மினி லட்சுமிபதி சாலை
எழும்பூர், சென்னை – 600 008.

8) உதவி இயக்குநர் (கணினி) – **மின் குறைதீர்ப்பாளரின் இணையதளத்தில் வெளியிடுவதற்காக**
தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம்,
எண். 19A, ருக்மினி லட்சுமிபதி சாலை,
எழும்பூர், சென்னை – 600 008.